LIBRARY
6 DEC 1963
STATE LEGISLATURE

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Friday, 15th March 1963.

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

பாடப் புத்தகங்கள் (விற்பனை)

*238 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சர்க்காரால் வெளியிடப்படும் பள்ளிக்கூடங்களுக்கான பாடப் புத்தகங்கள் ஏஜெண்டுகள் மூலமாக விற்பனை செய்யப்படுகின்றனவா?

(இ) 1962–63-ல் பாடப்புத்தகங்கள் விற்பனைக்காக ஏஜெண்டுகளுக்குக் கொடுக்கப்பட்ட கமிஷன் தொகை எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) Rs. 91,128.48 nP. (upto 31st December 1962).

திரு. து. ப. அழகமுத்து : விற்பனைக்காக ஏஜெண்டுகளுக்கு அனுப்பப் படும் புத்தகங்களுக்கான பாக்கிங் அண்டு பார்வேர்டிங் சார்ஜஸ் சர்க்காரால் ஏற்றுக்கொள்ளப்படுகிறதா அல்லது ஏஜெண்டுகள் அதைக் கொடுக்கிறார் களா ? சர்க்கார் கொடுக்கிறது என்றால் அதற்கு ஆகும் செலவு என்ன ? மற்றச் செலவுகள் ஏதேனும் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஏஜெண்டுகளுக்கு கமிஷன் கொடுக்கப் படுகிறது. வேறு எந்தச் செலவும் ஆவதாகத் தெரியவில்லை.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, புத்தகத்தில் குறித் திருக்கும் விலைக்கு மேல் ஏஜெண்டுகள் விற்கிறார்கள் என்ற குறை இருக் கிறது. ஆகவே, ஆங்காங்குள்ள பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்கள் மூலம் புத்தகங்களை வழங்க அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதைப்பற்றி நேற்றே நான் குறிப்பிட்டேன். இந்தப் புத்தகங்களை நேராக அரசாங்கமே வழங்கலாமா என்ற கருத்தும் இருந்தது. அது அவ்வளவு சுலபமல்ல என்று உணர்ந்த காரணத்தால், இந்த ஆண்டு ரிஜிஸ்டர்டு பப்ளிஷர்களிடமிருந்து டெண்டர் கள் கேட்டு விநியோகிப்பது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. குறிப் பிட்ட விலைக்கு மேல் ஏஜெண்டுகள் புத்தகங்களை விற்கிறார்கள் என்று எனக்குப் புகார் வரவில்லை. கனம் அங்கத்தினர் அவர்கள், குறிப்பாக எந்த இடத்தில் எப்படி விற்கிறார்கள் என்று தெரிவித்தால், அதற்கு மேல் நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளமுடியும்.

திரு. கே. பொன்னையா : சர்க்கார் அனுமதி கொடுத்தால், பெற்றோர் கள் சங்கத்தின் மூலமாக இந்தப் புத்தகங்களை விநியோகிக்கலாம் அல்லவா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பெற்றோர்கள் சங்கம் என்று சாதா ரணமாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அது ரிஜிஸ்டர்டு சங்கம் அல்ல. அவர்களால் சரியாக விநியோகிக்க முடியும் என்பதை ஒப்புக்கொள்ள

முடியாது. இப்போது பதிப்பாளர்களிடமிருந்து டெண்டர்கள் கோரப்பட்டு பரிசீலித்து அவர்கள் மூலம் விநியோகிக்கப்படுகிறது. இந்த முறையே சிறந்தது என்று அரசாங்கம் கருதுகிறது.

திரு. முனு. ஆதி : ஏஜெண்டுகள் எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள் ? டெபாசிட் கட்டும் முறை உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முன்பே கூறினேன். ரிஜிஸ்டர்டு பப்ளிஷர்ஸ் ஏராளமான பேர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொரு மாவட்டத் திற்கும் டெண்டர் கோரப்படுகிறது. டெண்டர்களைப் பார்த்து யார் குறைந்த கமிஷனுக்கு விற்க முன்வருகிறார்களோ அவர்கள் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள்.

திரு. து. ப. அழகமுத்து : சில பள்ளிக்கூடங்களில் ஸ்டுடேண்ட்ஸ் கோவாப்பரேட்டிவ் சொஸைட்டீஸ் வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு இந் தப் புத்தகங்களை அனுப்பி விநியோகித்தால் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தேர்ந்தெடுக்கப்பட்ட பப்ளிஷர்கள் அந்தக் கோவாப்பரேட்டிவ் சொஸைட்டீஸ் மூலமாகவும் பள்ளிக்கூடங்களுக்கு விற்கலாம்.

Panchayat Union Schools (Text-books)

* 239 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the procedure in force for prescribing text-books for the Panchayat Union Schools;

(*b*) whether there is a proposal to revise the procedure and change the authority prescribing the text-books; and

(*c*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The Panchayat Union Education Committee prescribes the text-books for Panchayat Union Schools in all subjects other than those for which text-books have been published by Government. The Committee can select only from out of the list of books approved as suitable for class use by the Text-Book Committee.

(*b*) & (*c*) Certain District Development Councils have suggested to Government that the selection of text-books for Panchayat Union schools may be made at the Development District level. The Government are examining the suggestions.

திரு. வி. எஸ். எஸ். மணி : மதுரை மாவட்டத்தில் பள்ளிப் பாடப் புத்தகங் கள் பஞ்சாயத்து யூனியனுக்கு யூனியன் வேறுபட்டிருக்கிறது. மாவட்ட அளவிலாவது ஒரேமாதிரிப் பாடப்புத்தகங்களை நிர்ணயிக்க அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் முன்பே கூறினேன். யூனியன் ஸ்டாண்டிங் கமிட்டி "டெக்ஸ்ட் புக்ஸ்"-ஐ நிர்ணயிக்கவேண்டு மென்று விதி இருக்கிறது. ஒருமாவட்டத்திலுள்ள டெவலப்மெண்ட் கவுன்சில் அளவில் மொத்தமாக ஸ்டாண்டிங் கமிட்டி மூலம் பாடப் புத்தகங்களை நிர்ணயிக்கலாம் என்ற யோசனை இப்போது பரிசீலனையில் இருக்கிறது.

திரு. எம். தண்டாயுதபாணி : பஞ்சாயத்து கூட்டுத் தலைவர்கள் அந்தக் கமிட்டிக்குத் தலைவர்களாக இருக்கலாமா அல்லது அங்கத்தினர் கள் தலைவராக இருக்கலாமா ?